**செ. கு. எண்: 241** **நாள்: 29.12.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>
<u>அவர்களின் அறிக்கை – 29.12.2018</u>

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ஏசு. செல்லப்பா;

விழுப்புரம் மாவட்டம், பெரியதச்சூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. பிரகாஷ்;

புதுக்கோட்டை மாவட்டம், மண்டையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. A. பென்ஜமின் தாஸ்;

சென்னை பெருநகரக் காவல், T-1 அம்பத்தூர் காவல் நிலைய போக்குவரத்து பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. S. பால்ராஜ்;

------- ஆகியோர் சாலை விபத்தில் உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், இ3 சரவணம்பட்டி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சி. பிரகாஷ்;

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. A. அதிவீரராமபாண்டியன்;

நீலகிரி மாவட்டம், உதகை போக்குவரத்து காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. J. ராஜ்குமார்;

மதுரை மாநகரம், D3 கூடல்புதூர் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. R.S. கண்ணன்;

சென்னை பெருநகரக் காவல், E-4 அபிராமபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. S. டேனியல் வசந்தகுமார்;

அரியலூர் மாவட்டம், கூவாகம் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ரா. மணிகண்டன்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. முத்தமிழ் செல்வன்;

விழுப்புரம் மாவட்டம், கிளியனூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. கண்ணன்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. அ. ஷாஜகான்;

சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. C. கணேசன்;

------- ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், ஆயுதப்படையில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. P. முருகேசன் அவர்கள் விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 15 காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்த மேற்கண்ட **15 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**